நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 90/2019

அரசு தரப்புக்காக அ. சா.7 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | தொழில்/பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 9 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 26th day of June 2025.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 03.09 )

நான் தற்போது விருத்தாசலத்தில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன அம்சவள்ளி எனது தங்கை. நந்தினி எனது தங்கை மகள். ஆஜர் எதிரியை தெரியும் . 27.06.2018ஆம் தேதி காலை 06.00 மணி அளவில் நான் எனது ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது எதிரி வேல்முருகனுக்கும் அம்சவள்ளிக்கும் மறைமலைஅடிகள் தெருவில் அவர்கள் வீட்டில் சண்டை நடந்ததாக சொன்னார்கள். நான் பார்த்தபோது கூட்டமாக இருந்தார்கள். நான் பார்க்கும்போது அம்சவள்ளியும் நந்தினியும் எரிந்து தீக்காயத்துடன் இருந்தார்கள். நான் அவர்களை எனது ஆட்டோவில் கூட்டிச்சென்று விருத்தாசலம் ஜிஎச்–ற்கு கொண்டுவிட்டேன். 29.06.2018 அன்று காலை 09.00 மணியளவில் எனது ஆட்டோவை எடுத்துக்கொண்டு பேருந்து நிலையத்தில் இருந்து கடை வீதிக்கு வந்து கொண்டிருந்தபோது, கடை வீதி

அருகே எதிரியை போலிசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். வேல்முருகனை பார்த்துவிட்டு நின்றேன். போலிசார் வேல்முருகனை விசாரித்தார்கள். நடந்தது என்ன என்று கேட்டபோது நந்தினியை ஊற்றி கொளுத்தினீர்களா என்று கேட்டபோது எதிரி அதை ஒத்துக்கொண்டார். எதிரி வேல்முருகன் கையொப்பம் போட்டதில் என்னிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். (அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## <u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அம்சவள்ளி எனது தங்கை. போலிசார் என்னை விசாரித்ததாக கூறும் சமயத்தில் நான் தான் என்னுடைய ஆட்டோவில் அம்சவள்ளியையும், நந்தினியில் கூட்டி சென்று ஜிஎச் மருத்துவமனையில் சேர்த்தேன் என்று சொன்னேன் என்றால் சரிதான். ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது எனக்கு தகவல் சொன்னது யார் என்றால் பெயர் தெரியவில்லை. தெருகாரர்கள் சொன்னார்கள். விருத்தாசலத்தில் 7 ஆட்டோ ஸ்டாண்ட் உள்ளது என்றால் சரிதான். எந்த ஆட்டோ ஸ்டாண்டில் நான் இருந்தேன் என்று போலிஸ் விசாரிக்கும்போது நான் சொன்னேனா என்றால் அவர்கள் கேட்கவில்லை. நான் சொல்லவில்லை. மறைமலைஅடிகள் தெருவிற்கும் கடை வீதி ஆட்டோ ஸ்டாண்டிற்கும் ஒரு கி.மீ இருக்கும் என்றால் இல்லை அரை கி.மீ இருக்கும். டாக்டரிடம் நான் தகவல் சொன்னேனா என்றால் இல்லை. விருத்தாசலம் அரசு மருத்துவமனை முகப்பிற்கும் ஐசியு யூனிட்டிற்கும் தூரமாக இருந்தது. அம்சவள்ளியும் நந்தினியும் நடந்துதான் சென்றார்களா என்றால் ஆமாம். போலிசார் என்னை விசாரித்தபோது சவாரி வந்தேன். வேல்முருகனைப் பார்த்தேன் என்று சொன்னேனா என்றால் இல்லை. ஜெயின் ஜூவல்லரி என்பது கடைவீதிக்கும் கிழக்கு புறத்திலும் மேற்கு புறத்திலும் இரண்டு கடைகள் உள்ளது என்றால் சரிதான். கடைவீதி என்பது போலிஸ் ரவுண்டானாவில் இருந்து தெற்கு தெரு வரை ஒன்றரை கி.மீ என்றால் சரிதான். நான் சொல்வது போல எதுவும் நடக்கவில்லை என்றும் , நான் ஆட்டோ ஓட்டுவதால் போலிசார் சகாயம் வேண்டும் என்பதற்காக அவர்கள் சொல்லி கொடுத்தபடி தவறாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடைவீதியில் நான்கு பஸ் ஸ்டாப் இருக்கிறது என்றால் சரிதான். கடை வீதியில் ஜன நடமாட்டம்

அதிகம் இருக்கும் என்றால் சரிதான். கடைவீதியில் போலிஸ் ரவுண்டானாவும் டிராபிக் போலிஸ் ஸ்டேஷனும் இருக்கிறது என்றால் சரிதான்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 03.26)

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

Sd/–G.Kulasekaran
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.